**அரக்கோணம் நகராட்சி**

**சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு**

கூட்ட எண்.52 நாள்.28.01.2020.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 31.01.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

அரக்கோணம் நகராட்சி 31.01.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர்(பொ) (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர்/2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**நகர மன்ற தீர்மான எண்.664 நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :— அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரியும் திரு.சுரேஷ் த/பெ சங்கர், என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக வாலாஜா நகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்திற்கு பணியிடை மாறுதல் செய்ய ஆவணம் செய்து தருமாறு கோரியுள்ளார். எனவே மேற்காணும் பணியாளர் சமர்பித்துள்ள விண்ணப்பத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1106/எச்1/2019)

**நகர மன்ற தீர்மான எண்.665 நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :— அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :03**

மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், வேலூர்—12 அவர்களின் செயல்முறை கடித ந,க.எண்.27/2020/B2 நாள்.06.01.2020 செயல்முறை கடிதத்தின்படி 14—வது மத்திய குழு மானித்தின் கீழ் (14th-CFC) 2019—20ம் ஆண்டிற்கு அரக்கோணம் நகராட்சியில் கீழ்க்கண்டுள்ள சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை நகர மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பணியின் விவரம்** | **நீளம்(மீ)** | **அகலம்(மீ)** | **மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில் )** |
|---|---|---|---|---|
| 1 | **சிப்பம் —I** வார்டு எண்.02, மாதாவ நகர் 3—வது தெரு, 4—வது தெரு, வார்டு எண்.06 நேருஜி நகர் 2—வது தெரு, 3—வது தெரு, காமராஜ் நகர் 2—வது தெருவிற்கு பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல். | 816.00 | 4.50 | 50.00 |
| 2 | **சிப்பம் —II** வார்டு எண்.06 நேருஜி நகர் 8—வது தெரு, காமராஜ் நகர் 1—வது தெரு மற்றும் வார்டு எண்.15 டவுன் ஹால் 1—வது தெருவிற்கு பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல். | 763.00 | 5.00 | 50.00 |
| 3 | **சிப்பம் —III** வார்டு எண்.28, புதுப்பேட்டை 1—வது, 2—வது, 3—வது தெரு, 4—வது தெரு, வார்டு எண்.29 டி.என் நகர் 1—வது தெருவிற்கு பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல். | 819.00 | 4.5 | 50.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | <u>**சிப்பம் –IV**</u> வார்டு எண்.04, TNHB பிள்ளையார் கோயில் தெரு, வார்டு எண்.15 டவுன் ஹால் 4–வது தெரு, வார்டு எண்.15 கணேஷ் நகர் 14–வது தெருவிற்கு தார் சாலைகள் அமைத்தல். | 670.00 | 5.00 | 50.00 |
| 5 | <u>**சிப்பம் –IV**</u> வார்டு எண்.14, மாணிக்கம் தெரு, வார்டு எண்.6 வேணு கோபால் தெரு, வார்டு எண்.03 TNHB பெண்கள் மேல்நிலைப்பள்ளி தெருவிற்கு தார் சாலைகள் அமைத்தல். | 690 | 5.00 | 50.00 |

அலுவலகக்குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.22/2020/இ1)

**நகர மன்ற தீர்மான எண்.666** **நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :04**

14–வது மத்திய குழு மானித்தின் கீழ் (14th-CFC) 2019–20ம் ஆண்டிற்கு அரக்கோணம் நகராட்சியில் கீழ்க்கண்டுள்ள சாலை பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 28.01.2020 அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதி பெற்றதை தொடர்ந்து 30.01.2020 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) திறக்கப்பட்டதில் பின்வருமாறு வரப்பெற்றுள்ளது.

| சிப்பம் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4 | 5 |
| 1 | <u>சிப்பம் –I</u> வார்டு எண்.02, மாதாவ நகர் 3–வது தெரு, 4–வது தெரு, வார்டு எண்.06 நேருஜி நகர் 2–வது தெரு, 3–வது தெரு, காமராஜ் நகர் 2–வது தெருவிற்கு பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல். | 50.00 | திரு.ஜி.தாமோதரன் | 4.88% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.கே.வாசு | 5.37% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | <u>சிப்பம் –II</u> வார்டு எண்.06 நேருஜி நகர் 8–வது தெரு, காமராஜ் நகர் 1–வது தெரு மற்றும் வார்டு எண்.15 டவுன் ஹால் 1–வது தெருவிற்கு பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல்.. | 50.00 | திரு.கே.பசுபதி | 4.85% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.ஜி.கே.பாபுஜி | 5.70% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | சிப்பம் –III வார்டு எண்.28, புதுப்பேட்டை 1–வது, 2–வது, 3–வது தெரு, 4–வது தெரு, வார்டு எண்.29 டி.என் நகர் 1–வது தெருவிற்கு பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல். | 50.00 | டெக்னிக் இன்பராஸ்டக்சர் | 4.37% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.எம்.சோமசுந்தரம் | 5.28% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | சிப்பம் –IV வார்டு எண்.04, TNHB பிள்ளையார் கோயில் தெரு, வார்டு எண்.15 டவுன் ஹால் 4–வது தெரு, வார்டு எண்.15 கணேஷ் நகர் 14–வது தெருவிற்கு தார் சாலைகள் அமைத்தல். | 50.00 | திரு.கே.பசுபதி | 4.33% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.ஜி.கே.பாபுஜி | 5.60% மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | சிப்பம் –IV வார்டு எண்.14, மாணிக்கம் தெரு, வார்டு எண்.6 வேணு கோபால் தெரு, வார்டு எண்.03 TNHB பெண்கள் மேல்நிலைப்பள்ளி தெருவிற்கு தார் சாலைகள் அமைத்தல். | 50.00 | திரு.எஸ்.ரமேஷ்பாபு | 3.85% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.டி.சரவணன் | 10.14% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் சிப்பம் – I முதல் சிப்பம் – V வரை வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் இரு விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள

1. சிப்பம் –I திரு.ஜி.தாமோதரன் – 4.88%
2. சிப்பம் –II திரு.கே.பசுபதி – 4.85%
3. சிப்பம் –III டெக்னிக் இன்பராஸ்டக்சர் – 4.37%
4. சிப்பம் –IV திரு.கே.பசுபதி – 4.33%
5. சிப்பம் –V திரு.எஸ்.ரமேஷ்பாபு – 3.85%

மேற்படி சிப்பம் –I முதல் சிப்பம் – V வரையிலான ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து வழங்குமாறு கடந்த 30.01.2020 அன்று Negotiation கடிதம் அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் மேற்கண்ட ஒப்பந்ததாரர்கள் கொடுக்கப்பட்ட கடிதங்களில் பணியாட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை ஏற்றத்தினால் குறைத்து தர இயலாது என தெரிவித்துள்ளார்.

| பணி | ஒப்பந்ததாரர் | மதிப்பட்டை விட அதிகம், | குறைத்து தர ஒப்புதல் அளித்தது | தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம் |
|---|---|---|---|---|
| சிப்பம்–1 | திரு.ஜி.தாமோதரன் | 4.88% | - | 4.88% |
| சிப்பம்–2 | திரு.கே.பசுபதி | 4.85% | - | 4.85% |

| | | | | |
|---|---|---|---|---|
| சிப்பம்–3 | டெக்னிக் இன்பராஸ்டக்சர் | 4.37% | - | 4.37% |
| சிப்பம்–4 | திரு.கே.பசுபதி | 4.33% | - | 4.33% |
| சிப்பம்–5 | திரு.எஸ்.ரமேஷ்பாபு | 3.85% | - | 3.85% |

மேற்படி சிப்பம்–1 முதல் சிப்பம்–5 வரை வரப்பெற்ற ஒப்பந்ததாரரின் ஒத்திசைவு கடிதத்தின் படி முன்னர் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் பணியினை செய்யவும், சாலை பணிக்கு தேவையான மூலப்பொருள்களின் விலை உயர்வினையும் கருத்தில் கொண்டு, அதே விலைவிகிதத்தில் பணியை செய்ய கடிதம் அளித்துள்ளனர் எனவே திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும், காலதாமதத்தையும் தவிர்க்கும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கவும், மேலும், மதிப்பீட்டை விட கூடுதல் விலைப்புள்ளி அளித்துள்ள தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.22/2020/இ1)

**நகர மன்ற தீர்மான எண்.667** **நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :05**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் **2019–20**ஆம் ஆண்டின் கீழ் அரக்கோணம் நகராட்சியில் கீழ்காணும் சாலைப்பணிகளை மேற்கொள்ள சிப்பம் **–2**க்கான மறு ஒப்பந்தப்புள்ளி **24.01.2020** அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதி பெற்றதை தொடர்ந்து **27.01.2020** அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) திறக்கப்பட்டதில் பின்வருமாறு வரப்பெற்றுள்ளது.

| சிப்பம் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4 | 5 |
| 1 | Package – II Providing CC surface Road at Bajanai koil Street ,Rajabathar Street Ward-11, Vethachalam Street Ward-13, Manickam Street Ward-14, HC kuppusamy Street Ward-15,Thiruvallur Street, Milk society | | திரு.ஜி.தாமோதரன் | 4.22% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | koil Street Ward-16,Balasubramanian koil Street, Kannan Flour Mill,Mettu st Ward-17, Sarojini Street Ward-18, Dharmaraja Koil Street, Murugappan Street, Subburayan Street Ward-18, Sanathiamman koil Street, Othavadai Street, Srinivasan Street Ward-19, Narasimman Street, Karpaga pillaiyar koil Street, Ward-20,Thiyagi chinnasamy Street, in Arakkonam Municipality. | 200.00 | திரு.கே.வாசு | 4.30% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற சிப்பம் – II க்கான வரப்பெற்ற இரு விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஜி.தாமோதரன் – 4.22% அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து குறைத்து வழங்குமாறு கடந்த **27.01.2020** அன்று Negotiation கடிதம் அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்பந்ததாரர் திரு.ஜி.தாமோதரன் அவர்களின் **28.01.2020**ம் தேதிய கடிதத்தில் முன்னர் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தில் **(4.22 %)** பணியினை செய்ய உள்ளதாகவும், சாலை பணிக்கு தேவையான மூலப்பொருள்களின் விலை உயர்வினையும் கருத்தில் கொண்டு, விலைவிகிதத்தினை குறைத்து தர இயலாது என பணியை செய்ய கடிதம் அளித்துள்ளனர். திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும், காலதாமதத்தையும் தவிர்க்கும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கவும், மேலும், மதிப்பீட்டை விட கூடுதல் விலைப்புள்ளி அளித்துள்ள தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்**

**(ந.க.எண்.1217/2019/இ1)**

**நகர மன்ற தீர்மான எண்.668 நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :06**

இந்நகராட்சியில் **2019–2020**ன் கீழ் **24.01..2020**ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |

| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கல்லாறு தலைமை நீரேற்று நிலையம் மற்றும் விண்டர்பேட்டை நீர் உந்து நிலையப்பகுதிக்கு குடிநீர் விநியோகத்திற்கு தேவையான சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் விநியோகம் செய்தல். | **9.00** | சபரி இன்ஜினியரிங் | 0.56% | ராஜா கணபதி இன்ஜினியரிங் | 2.24 % |
| 2 | நகராட்சி அலுவலக மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் அசோக் நகர் நீர் உந்து நிலையப்பகுதிக்கு குடிநீர் விநியோகத்திற்கு தேவையான சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் விநியோகம் செய்தல். | **9.90** | சபரி இன்ஜினியரிங் | 0.56% | ராஜா கணபதி இன்ஜினியரிங் | 2.24 % |
| 3 | தக்கோலம் மற்றும் கல்லாறு தலைமை நீரேற்று நிலையத்தில் தனியார் ஆட்களை கொண்டு பராமரிப்பு பணிகள் செய்தல். | **9.70** | ஆர் சண்முகம் | 0.18% | எஸ்.ரமேஷ்பாபு | 1.81 % |
| 4 | விண்டர்பேட்டை மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் தானியங்கி குடிநீர் அளவு மானி (Digital Electro Magnetic Meter) பொருத்தி இயக்கி தருதல். | **3.40** | சபரி இன்ஜினியரிங் | 0.29% | ராஜா கணபதி இன்ஜினியரிங் | 0.29 % |
| 5 | புதிய பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | **9.90** | ஆர்.துரைராஜன் | 0.05% | ஆர் சண்முகம் | 1.00 % |

அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 4 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .887/இ1/2018

**நகர மன்ற தீர்மான எண்.669** **நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :07**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 125 Hp – யூனிட் II வெர்டிகல் டர்பைன் மோட்டாரின் ஸ்டார் 125 Hp சாப்ட் ஸ்டாரில் உள்ள உள்ள ஆட்டோ

டிரான்ஸ்பார்மர் காயில் எரிந்துள்ளது இதனால் யூனிட் II மோட்டார் இயங்கவில்லை, மேலும் சாப்ட் ஸ்டாரின் மெயின் கான்டக்ட், வேர்லோடு ரிலே 240 Sq mm UG கேபிள் டெர்மினேசன் பழுதடைந்துள்ளது. எனவே யூனிட் II மோட்டாரை இயக்க யூனிட் II சாப்ட் ஸ்டாரில் ஆட்டோ டிரான்ஸ்பார்மர் காயில் மெயின் கான்டக்ட் மற்றும் ஓவர்லோடு ரிலே இவைகளை புதுப்பிக்க வேண்டியுள்ளது இதற்காகும் தோராய செலவினம் ரூ.1.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .887/இ1/2020

**நகர மன்ற தீர்மான எண்.670 நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :08**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.03 கணேஷ் நகர் 11–வது தெரு சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் புதியதாக தார் சாலை அமைக்க தயரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .887/இ1/2019

**நகர மன்ற தீர்மான எண்.671 நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :09**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பள்ளிகள் குடியிருப்பு பகுதிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் டெங்கு காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் திடக்கழிவு மேலாண்மை மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குடிநீர் சிக்கனம், மழைநீர் சேகரிப்பு ஆகியவற்றை பொது மக்களிடையே கலை நிகழ்ச்சிகள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த ஆகும் தோராய செலவினம் ரூ.150000/– பொதுநிதியிலிருந்து செலவு செய்துகொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.எப்1/2019/44)

**நகர மன்ற தீர்மான எண்.672 நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :10**

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் TATA ACE மினி லோடு வேன் (LCV) எண். TN73V 9270 தகுதிச்சான்று பெறவும் மற்றும் இதர பழுது நீக்கம் செய்யவும், தோராய செலவினம் **ரூ.1.20** லட்சத்திற்கும், மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.74/எச்1/2019)

**நகர மன்ற தீர்மான எண்.673 நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :11**

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் குப்பை எடுக்கும் லாரி எண். TN23S 6307 தகுதிச்சான்று பெறவும் மற்றும் இதர பழுது நீக்கம் செய்யவும், தோராய செலவினம் **ரூ.2.00** லட்சத்திற்கும், மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.52/எச்1/2019)

**நகர மன்ற தீர்மான எண்.674** **நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :12**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரியும் திரு.எ.ஜேம்ஸ் த/பெ ஆசிர்வாதம் என்பவர் இருசக்கர வாகனம் புதியதாக வாங்குவதற்கு தமது 24.05.2019 நாள் விண்ணபத்தின் மூலம் கோரியுள்ளார். பணியாளர் கோரும் வாகன முன்பணம் ரூ.50,000/–ம் அரசு விதிகளின்படி வழங்கிடவும் இதனை பிரதிமாத ஊதியத்தில் வட்டியுடன் பிடித்தம் செய்து கொள்ளவும் பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> பணியாளருக்கு வழங்கப்படும் வாகன முன்பணம் மீள ஊதியத்திலிருந்து வட்டியுடன் பிடித்தம் செய்யப்படும் என்பதால் இதனை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 000852/2019/பி3)

**நகர மன்ற தீர்மான எண்.675** **நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :13**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11ல் உள்ள உப்புகுளம் ராஜாபாதர் தெரு, பிரதான சாலையை விட் மிகவும் தாழ்வாக உள்ளதால் பொதுமக்களுக்கும் போக்வரத்திற்கும் இடையூராக இருப்பதால் சாய்வுதளம் அமைத்து உப்புகுளம் வரையில் உள்ள பகுதியை உயர்த்திட கான்கீரிட் சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு அனுமதியும், இப்பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 887/2018/இ1

**நகர மன்ற தீர்மான எண்.676** **நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :14**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட விண்டர்பேட்டை பகதியில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள சமையல் அறை மற்றும் இருப்பு அறை மிகவும் பழுதடைநதுள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி அதே இடத்தில் புதிய சமையலறை மற்றும் இருப்பு அறை கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.450000/–க்கு அனுமதியும், இப்பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 887/2018/இ1

**நகர மன்ற தீர்மான எண்.677** **நாள்: 28.01.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**